**செ.வெ.எண்:57** **நாள்: 29.10.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆழ்துளை கிணறுகள் பயன்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (29.10.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து கிராம மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள பொது மக்கள், ஆழ்துளை கிணறு வெட்டுவதற்கான உரிமம் வைத்திருக்கும் நபர் அல்லது கிணற்றின் உரிமையாளர் தங்கள் இடத்தில் உள்ள கைவிடப்பட்ட ஆழ்துளை கிணறுகளை களிமண், மணல், கற்கள் கொண்டு தரை மட்டம் வரை சமதளமாக கண்டிப்பாக மூடிவிடவேண்டும். உறுதியான மூடியை கொண்டு ஆழ்குழாய் கிணற்றின் வாயினை மூடி வைக்கவேண்டும். மேலும் மூடத் தவறும் பட்சத்தில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜெ.பாலாஜி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**